**கந்தளாய் பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 பெப்ரவரி 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கந்தளாய் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீஏ/இபொதுகநி ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

----------------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை 27 கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,930,805 தொகையான கடை வாடகைகளில் 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட ரூபா 74,410 தொகையான வாடகை முற்கொடுப்பனவுகளின் கீழ் கணக்கீடு செயற்படாது கிடைக்க வேண்டிய வாடகையிலிருந்து ஈடுசெய்யப்பட்டமையினால் பெறவேண்டிய கடை வாடகை ரூபா 1,856,395 தொகைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய கடை வாடகை ரூபா 74,410 தொகை கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் பதிவேட்டின் படி 2013 திசெம்பர் 01 இல் உள்ளவாறு ரூபா 4,450,814 தொகையான ஊழியர் கடன் மீதி ரூபா 4,215,326 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஊழியர் கடன் ரூபா 235,488 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபைக் கட்டிடத்தில் ரூபா 11,881,502 கிரயம் நிலையான சொத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூடலைக் கூட நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான வேலைக்காக ஏற்பட்ட 2013 திசெம்பர் 31 வரை செலவு செய்யப்பட்ட ரூபா 3,694,084 பெறுமதி நடைமுறை வேலையைக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டில் சபைக்குக் கையளிக்கப்பட்ட 66 கடைகளையுடைய பொதுச் சந்தைக் கட்டிடம் மற்றும் 24 கடைகளையுடைய பஸ் நிலையக் கட்டிடம் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மகநெகம கிராமிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச சபை உறுப்பினர்களின் நிதி ஏற்பாட்டின் மூலம் மீளாய்வாண்டில் கொங்ரீட் சிறு கற்கள் இட்டு பூர்த்தி செய்யப்பட்ட 14 வீதிகளுக்குரிய செலுத்த வேண்டிய பெறுமதியான ரூபா 6,994,018 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வேலை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,664,669 தொகை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையினால் அந்த விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது பரீட்சிப்பதற்கோ முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணியும் கட்டிடமும் | 24,331,745 | விரிவான பட்டோலை, நிலையான சொத்துப்பதிவேடு, உரித்துறுதி |
| பெறவேண்டிய கணக்குகள் | 16,158,350 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை, விரிவான பட்டோலை. |
| செலுத்தவேண்டிய கணக்குகள் | 1,114,116 | |

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | மாகாண நிதி விதி இலக்கம் 236 | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 30,305 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,846,449 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,533,325 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமான மானியம் ரூபா 2,426,110 இனால் குறைவடைந்தமை மற்றும் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 3,258,526 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 6,379,774 இனால் வீழ்ச்சியடைவதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 5,320 | 4,666 | 9,610 |
| வாடகை | 7,125 | 3,314 | 5,667 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 555 | 731 | - |
| ஏனைய வருமானம் | 9,554 | 17,282 | 2,000 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாகக் கிடைக்க வேண்டிய பணத்தை இனங்கண்டு பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தை மற்றும் பஸ் நிலையக் கடைகளை வியாபாரிகளுக்கு வழங்காமை

--------------------------------------------------------------------------------------------------------------------------------

2011 ஆம் ஆண்டின் போது 32 பழைய கடைகள் உடைத்து அகற்றப்பட்டு புதிய பொதுச் சந்தையில் 66 கடைகளும், பஸ் நிலையத்தில் 24 கடைகளும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2013 மார்ச் 27 ஆந் திகதி பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கையேற்றப்பட்ட மேற்கூறப்பட்ட 90 கடைகள் சபைக்குக் கையளிக்கப்பட்ட திகதி முதல் 18 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii). புதிய சந்தைத் தொகுதி நிர்மாணத்தின் போது உடைத்து அகற்றப்பட்ட 32 கடை உரிமையாளர்களுக்கும் பிரதேச சபையின் வியாபாரிகளுக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் கடைகளை பகிர்ந்தளிப்பதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் சபை தவறியிருந்தது.

(ஆ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

--------------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i). 2014 யூலை 02 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்ப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 23 பொருள் வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும், அகற்றுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 138 பொருள் வகைகள் மற்றும் 363 புத்தகங்கள் என்பவற்றை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பிரதேச சபைக்குச் சொந்தமான 11 இடங்களுக்குரியதாகக் காணப்பட்ட சகல பொருள் விடயங்களுக்கும் புதிய கணணி பதிவேட்டின் படி அகராதி ஒழுங்கு முறையில் மீண்டும் இலக்கமிடப்பட்டு பொருள் பதிவேடு புதிதாக தயாரிக்கும் செயற்பாட்டின் முன்னேற்றம் கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதிவரையிலும் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

(இ) ரூபா 42,949 பெறுமதியான 235 புத்தகங்கள் தொலைந்து போயிருந்ததுடன் அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூறுமலை கோரல், கூறு வகைகளைத் திறத்தல், மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் தகுதியான வழங்குனர்களைத் தெரிவு செய்யும் முறையான நடைமுறை பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 933,687 கூட்டுப்பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்காது ஆண்டின் போது பெறப்பட்ட கட்டணங்கள் யாவும் ஆண்டின் வருமானமாகக் கருதப்பட்டமையால் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---------------------------------------------------------------------

1997 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வான் வண்டி 2013 நவம்பர் மாதத்தின் போது செயற்பாடற்றதாக வாகனத் தளத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 இனங்காணப்பட்ட நட்டம்**

----------------------------------------

2005 செப்தெம்பர் 08 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரூபா 04 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் சபையின் முன்னாள் செயலாளரினால் அபிவிருத்தி வேலைகளுக்காக பயன்படுத்துவதற்கு 2010 சனவரி 05 ஆந் திகதி பணமாக மாற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்கூறப்பட்ட ரூபா 4 மில்லியன்களில் ரூபா 01 மில்லியன் சபையின் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 03 மில்லியனும் அவரினால் சபைக்கு கணக்காள்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 11 ஆந் திகதிய சபைச் செயலாளரின் அறிக்கையின் பிரகாரம் இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்பட்டது.

(ஆ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் சபைக்குச் சொந்தமான மேற்கூறப்பட்ட பணம் சபைக்கு பெறப்படாதிருந்தும் சபையினால் இது தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆவது பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒழுக்காற்கு விசாரணையொன்று நடத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

பிரதேச சபை 2012 நவம்பர் 08 ஆந் திகதி ரூபா 15,848,605 ஒப்பந்தப் பெறுமதியில் கந்தளாய் நகரத்தில் மின்சார சுடலைக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2013 மார்ச் 08 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்தங்களின் கீழ்) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 5,194,037 தொகைக்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 12,985 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை கழிவுப் பொருள் முகாமைத்துவ கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2011 யூலை 25 ஆந் திகதி சமூக சபைச் சங்கத்துடன் ரூபா 324,530 ஒப்பந்தப் பெறுமதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கைகளின் படி 2012 சனவரி 25 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சங்கத்தின் மூலம் ரூபா 388,368 ஆற்றப்பட்ட வேலைப் பெறுமதிக்கு 2011 ஒக்தோபர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலுக்காக கணக்காய்வுத் திகதி வரையிலும் ஆற்றப்பட்ட வேலைப் பெறுமதியை உறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்ட வேலைகள் உப ஒப்பந்தமாக வழங்க முடியாதிருந்த போதிலும் உப ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவுகள் தாமதமாகியமை தொடர்பாக அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின்படி இந்த நிர்மாண சங்கத்தினால் உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இந்தக் கட்டிடம் 06 கொங்ரீட் தூண்களை பதித்து தரைக்கு கொங்ரீட் இட்டு, இரும்புக் குழாய்களினால் (Angle Iron) கூரை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதன் கூரை சிவிலீம் செய்யப்படாமையால் கூரையின் இரும்புக் குழாய் துருப்பிடித்தலுக்குள்ளாகியிருந்தது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 |
| இரண்டாம் நிலை | 19 | 16 | 03 |
| மூன்றாம் நிலை | 28 | 24 | 04 |
| மொத்தம் | 50 | 41 | 09 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் பதவிக்காக தகுதியான நபரொருவரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) ஆயுர் வேத வைத்திய உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதி, இயந்திர இயக்குனர் சுகாதாரத் தொழிலாளி மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்